கிராண்ட்ஸ் கமிஷனைக் கலந்து, எங்கெங்கே அவசியமோ அங்கெல்லாம் ஏற்படுத்துவது என்ற அடிப்படையை வைத்துக் கொண்டு, அந்தந்த இடங்களில் போதிய சர்வகலாசாலைகளை அமைக்க வேண்டுமென்று சர்க்கார் முயற்சி செய்யும்.

SRI V. SANKARAN: ஏற்கனவே பல வருஷங்களாக கேட்டுக் கொண்டு வருகிற ஒரு மாவட்டத்தினுடைய கோரிக்கையையும், அதோடு ஏற்கனவே சில அமைச்சர்கள் பல இடங்களில் சூசகமாக வும், வெளிப்படையாகவும் மதுரையில் ஒரு சர்வகலாசாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று சொல்லிய பேச்சுக்களையும் கௌரவிக்க மதுரையில் சர்வகலாசாலை அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது சர்வகலாசாலை அமைக்கக்கூடிய விஷயம். மந்திரிகளுடைய கருத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இது அமைப்பது அல்ல. இது சர்வ கலாசாலையின் சிபார்சையும் பொறுத்திருக்கிறது. நான் முன்பு சொன்னது போல யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சை யும் பொறுத்திருக்கிறது. இதையெல்லாம் வைத்துக்கொண்டு முடிவு எடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகையினாலே அநேக ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு வருகிறோம் என்ற அடிப்படையில் முடிவு செய்ய முடியாது. மந்திரிகள் விரும்புகிறார்கள் என்ற அடிப்படையிலும் முடிவு செய்ய முடியாது.

SRI N. R. THIAGARAJAN: ஏற்கனவே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் மதுரை யில் இருந்திருக்கின்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் மதுரையில் தோன்றியது. இதையெல்லாம் ஞாபகத் தில் வைத்துக்கொண்டு சங்கம் வளர்த்த மதுரையில் சர்வகலா சாலை ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதை அடிக்கடி வலி யுறுத்தவேண்டாம் என்று ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், மதுரையில் அக்கரை இருந்தால். ஏனென்றால் மதுரையில் மூன்று சங்கங்கள் இருந்து அழிந்து விட்டன, மறுபடியும் அங்கு ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டு அழிந்து விடக்கூடாது என்று மக்கள் நினைத்துவிடக்கூடாது. (சிரிப்பு).

SRI S. LAZAR: மாவட்டங்களிலே அதிகப்படியான கல்லூரி கள் இருக்கிற காரணத்தினால் அங்கே யுனிவர்ஸிடி வேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், மேலும் ஏற்படுத்தக்கூடிய கல்லூரிகளை கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுமாதிரி தான் இப் பொழுது கல்லூரிகள் அமைத்துக்கொண்டு வரப்படுகிறது. ஆனால் இப்பொழுது சாதாரணமாக பட்டப் படிப்பு கல்லூரிகள்

21st January 1961]

இருக்கக்கூடிய இடங்களில் இன்னும் போதுமான மாணவர்கள் சேரவில்லை. ஆகையினால் அங்கெல்லாம் புதியதாக கல்லூரிகள் ஏற்படுத்துவது என்பது பற்றி கொஞ்சம் நிதானமாக யோசித்துத் தான் முடிவு செய்யப்படுகிறது.

SRI V. SANKARAN : ஏற்கனவே உள்ள சென்னை சர்வகலா சாலை தன்னைப்போன்று இன்னொரு சர்வகலாசாலை இந்த ராஜ்யத்தில் சில மாவட்டங்களைக் கொண்டு வைத்தால் தன்னுடைய ஆதிக்கம் ஓரளவு குறைந்துவிடும் என்ற காரணத்தை வைத்து அதற்கு மாறாக அபிப்பிராயம் கொடுத்தால், அதை யெல்லாம் மனதில் கொண்டு பரிசீலிப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : செனட்டில் இருக்கக் கூடியவர்கள் சென்னையிலும், சென்னைக்கு பக்கத்திலும் மட்டும் இருக்கக்கூடியவர்கள் அல்ல. நமது ராஜ்யம் முழுவதிலும் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்திருக்கக்கூடியவர்கள் செனட்டில் இருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளின் அவசியத்தையும் மனதில் வைத்து அவர்கள் முடிவு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலும் சர்வகலாசாலையில் இருக்கக்கூடிய அறிஞர்கள் இதுபோன்று போட்டி வந்துவிடும் என்ற அடிப்படையில் நினைக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் இன்னொரு சர்வகலாசாலை தொடங்குவது பற்றி சென்னை சர்வகலாசாலைக்கும், யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷனுக்கும் என்ன யோசனைகள் அனுப்பியிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதுரையில் இன்னொரு சர்வகலாசாலை ஏற்படுத்தலாமா, அதுபற்றி கருத்து என்ன என்று யுனிவர்ஸிடியைக் கேட்டிருக்கிறோம்.

Nakkambadi Village Lake

* 76 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN (on behalf of SRI S. RAMALINGA PADAYACHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகா நக்கம் பாடி கிராம ஏரியை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியாயின், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration of the Chief Engineer (Irrigation).